# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை
# ஒக்டோபர் 2022.10.20

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.10.20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.30 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை சபையின் செயலாளர் திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் அவர்கள் பிரசன்னமாகியிருந்ததுடன் கீழ்க்காணும் அங்கத்தவர்களும் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
2. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
3. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவன்
4. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
5. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
6. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
7. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
8. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
9. கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா
10. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
11. கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன்
12. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
13. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
14. கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி
15. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்
16. கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ்
17. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
18. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
19. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
20. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
21. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா
22. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
23. கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன்
24. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
25. கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன்
26. கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ்
27. கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 54 வது கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், சபையின் செயலாளர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களான சொக்கலிங்கம் சபேசன், மார்க்கண்டு மகாதேவா ஆகியோர் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறியத் தந்துள்ளார்கள் எனக் கூறி அவர்களது விடுமுறைகளினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

❖ கௌரவ உறுப்பினர்களான சொக்கலிங்கம் சபேசன், மார்க்கண்டு மகாதேவா ஆகியோர்களின் விடுமுறைகளினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர்களான ஐயாத்துரை மயூரன், சேனாதிராசா கலையமுதன் ஆகியோர் காலை 09.35 மணிக்கு வருகை தந்தனர்.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே இவ்வாண்டிற்கான இறுதிப்பகுதியை அடைந்துள்ளோம். வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய தேவையும் வருமானங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது. வலிகாமம் வடக்கில் 3300 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளபோது விமான நிலையத்திற்காக 1000 ஏக்கர் தவிர்த்து மிகுதியையும் இராணுவத்தினரின் தேவைக்காக அளவீடு செய்யவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. 7000 இற்கும் மேற்பட்ட மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய நிலையில் பலர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்ற போது இவ்வாறான செயற்பாடுகள் மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் சிதைவடையச் செய்வதாக உள்ளது. 2013 ஆம் ஆண்டில் உயர்பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எமது மக்கள் 2276 பேர் பதிவு செய்த வழக்கின் தீர்ப்பு நவம்பர் மாதம் 08 ஆம் திகதி

அறிவிக்கப்படும். இதே வேளை மக்கள் குறைவாக இருக்கின்ற கிராம சேவையாளர் பிரிவுகளை ஒன்றிணைத்து கிராம சேவையாளர் பிரிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகின்றது. இவை தொடர்பாக கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் காலை 09.40 மணிக்கு வருகை தந்தார்.

    - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 15.09.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

- செப்டெம்பர் மாதம் 15.09.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் காலை 09.44 மணிக்கு வருகை தந்தார்.

➢ அடுத்து 30.09.2022, 19.10.2022 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | SD Engineers, Araly South, Vaddukoddai | சபைநிதி மூலம் (அபிவிருத்தி ஒதுக்கம்-2019) மேற்கொள்ளப்பட்ட The Construction of Shopping Complex at Mallakam Stage II வேலைக்கான பிடிபணம் | Rs 120,000.00 |
| 02 | General Manager, Ceylon Electricity Board | Electricity Payment for below subjects<br>Estimated Cost for feeding agreement (Materials, Labour, Transport)- KKS Market – 77,301.60<br>Estimated Cost for provide 30A (02m), Security Post –KKS Market Shop – 01, 02, 03, 04 – 114,000.00 | Rs 191,301.60 |
| 03 | திரு.V.யோகேஸ்வரன், முருகன் உழவர் களஞ்சியம் | விவசாய உபகரணங்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 369,000.00 |
| 04 | Glory Aluminium Enterprises, Stanley Road, Jaffna | அலுமினிய பொருத்துகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 130,100.00 |
| 05 | Everest Pharmacy, Usan, Mirusuvil | ஆயுர்வேத மருந்துகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 250,950.00 |
| 06 | R.K.Electricals, Mallakam | மயிலிட்டி உப அலுவலக மின் இணைப்பு பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 113,305.00 |
| 07 | R.K.Electricals, Mallakam | மயிலிட்டி உப அலுவலக கட்டிடத்திற்கான மின் இணைப்பு பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 282,050.00 |
| 08 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | தலைமை அலுவலகத்திற்கான கல் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 493,000.00 |
| 09 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | மயிலிட்டி உப அலுவலக மதில் கட்டுமானத்திற்கான சீமெந்து கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 163,200.00 |
| 10 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | தலைமை அலுவலகத்திற்கான நிலக்கல் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 232,000.00 |
| 11 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Toner-05 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 199,801.00 |
| 12 | இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் | ஆயுர் வேத மருந்துகள் கொள்ளவனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 109,420.00 |
| 13 | R.K.Electricals, Mallakam | LED Bulb -120 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 102,000.00 |
| 14 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் அமைத்தல் - காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவின் 80% இனை பகுதிக் கொடுப்பனவாக வழங்கல் | Rs 1,782,119.02 |
| 15 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மலசலகூடம் அமைத்தல் - காங்கேசன்துறை சந்தை வேலைத்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவின் 80% இனை பகுதிக் கொடுப்பனவாக வழங்கல் | Rs 501,261.08 |

| | | | |
|---|---|---|---|
| 16 | Phase One Engineering, Church Road, Chankanai | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சேதன்பசளை உற்பத்தி நிலையம் அமைத்தல் - சீராவளை வேலைத்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவின் 80% இனை பகுதிக் கொடுப்பனவாக வழங்கல் | Rs 758,427.64 |
| 17 | S.M Engineers, Araly South, Vaddukoddai | PSDG - 2021 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Fish Market with Sanitary Facilities at Ralmadam - Alaveddy வேலைத்திட்டத்திற்கான பிடிபணம் | Rs 141,016.60 |
| 18 | Viththakan Community Center, Viththakapuram, Thellippalai | சபைநிதி 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Building for Store Room & Watcher Room at Compost Yard - Seeravalai வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 476,741.58 |
| 19 | United Motors Lanka PLC | PF 7745 இல வாகனம் திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 187,979.63 |
| 20 | United Motors Lanka PLC | PF 7745 இல வாகனம் திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 125,528.95 |

**தீர்மான இல: 01/20.10.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | SD Engineers, Araly South, Vaddukoddai | சபைநிதி மூலம் (அபிவிருத்தி ஒதுக்கம்-2019) மேற்கொள்ளப்பட்ட The Construction of Shopping Complex at Mallakam Stage II வேலைக்கான பிடிபணம் | Rs 120,000.00 |
| 02 | General Manager, Ceylon Electricity Board | Electricity Payment for below subjects<br>Estimated Cost for feeding agreement (Materials, Labour, Transport)- KKS Market – 77,301.60<br>Estimated Cost for provide 30A (02m), Security Post – KKS Market Shop – 01, 02, 03, 04 – 114,000.00 | Rs 191,301.60 |
| 03 | திரு.V.யோகேஸ்வரன்,<br>முருகன் உழவர் களஞ்சியம் | விவசாய உபகரணங்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 369,000.00 |
| 04 | Glory Aluminium Enterprises, Stanley Road, Jaffna | அலுமினிய பொருத்துகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 130,100.00 |
| 05 | Everest Pharmacy, Usan, Mirusuvil | ஆயுர்வேத மருந்துகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 250,950.00 |
| 06 | R.K.Electricals,<br>Mallakam | மயிலிட்டி உப அலுவலக மின் இணைப்பு பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 113,305.00 |
| 07 | R.K.Electricals,<br>Mallakam | மயிலிட்டி உப அலுவலக கட்டிடத்திற்கான மின் இணைப்பு பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 282,050.00 |
| 08 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | தலைமை அலுவலகத்திற்கான கல் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 493,000.00 |
| 09 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | மயிலிட்டி உப அலுவலக மதில் கட்டுமானத்திற்கான சீமெந்து கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 163,200.00 |
| 10 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | தலைமை அலுவலகத்திற்கான நிலக்கல் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 232,000.00 |
| 11 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Toner-05 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 199,801.00 |
| 12 | இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் | ஆயுர் வேத மருந்துகள் கொள்ளவனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 109,420.00 |
| 13 | R.K.Electricals,<br>Mallakam | LED Bulb -120 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 102,000.00 |
| 14 | Jana Civil Work,<br>Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் அமைத்தல் - காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவின் 80% இனை பகுதிக் கொடுப்பனவாக வழங்கல் | Rs 1,782,119.02 |
| 15 | Jana Civil Work,<br>Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மலசலகூடம் அமைத்தல் -காங்கேசன்துறை சந்தை வேலைத்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவின் 80% இனை பகுதிக் கொடுப்பனவாக வழங்கல் | Rs 501,261.08 |
| 16 | Phase One Engineering, Church Road, Chankanai | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சேதன்பசளை உற்பத்தி நிலையம் அமைத்தல் - சீராவளை வேலைத்திட்டத்திற்கான இறுதிக் | Rs 758,427.64 |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவின் 80% இனை பகுதிக் கொடுப்பனவாக வழங்கல் | |
| 17 | S.M Engineers, Araly South, Vaddukoddai | PSDG - 2021 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Fish Market with Sanitary Facilities at Ralmadam - Alaveddy வேலைத்திட்டத்திற்கான பிடிபணம் | Rs 141,016.60 |
| 18 | Viththakan Community Center, Viththakapuram, Thellippalai | சபைநிதி 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Building for Store Room & Watcher Room at Compost Yard - Seeravalai வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 476,741.58 |
| 19 | United Motors Lanka PLC | PF 7745 இல வாகனம் திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 187,979.63 |
| 20 | United Motors Lanka PLC | PF 7745 இல வாகனம் திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 125,528.95 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்களால் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நடைபெறும் மென்பந்து சுற்றுப்போட்டிக்கு செல்லும் சபை மென்பந்து அணியினரை வழியனுப்புவதற்காக காலை 09.47 மணிக்கு சபை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் 5 நிமிடங்கள் சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து காலை 09.52 மணிக்கு மீள ஆரம்பித்தார்.

➢ 2022.10.19 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை வகுத்தல் குழுக் கலந்துரையாடலில் சிபாரிசு செய்யப்பட்ட பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள குழுக்களிற்கு வரியிலிருந்து விலக்களிப்பு செய்வதற்கான கொள்கை சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

01. ஆதனவரி விலக்களிப்பு.
1987 ஆம் ஆண்டின் 15ம் இல பிரதேசசபைச்சட்டத்தினூடாக பிரிவு 135 இன் உப பிரிவு (உ) இற்கமைவாக வலிகாமம் வடக்கு பிரதேச எல்லையில் வாழும் ஏழ்மை நிலைக்குட்பட்ட ஆதனச்சொந்தக்காரர்கள் ஆதனவரி அறவீட்டில் முழுத்தொகையையும் விலக்களிப்பது.

- இவ் விலக்களிப்பு வழங்குவதற்கு ஏதுவாக ஏழ்மைநிலையை காரணம் காட்டி விலக்களிப்பு கோர விரும்புபவர்கள் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் சபை உத்தியோகத்தர்களால் ஆராயப்பட்டு ஏழ்மைநிலையை உறுதிப்படுத்த பிரதேச செயலரின் சிபாரிசிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- பிரதேச செயலரின் சிபாரிசு வழங்கப்பட்ட ஆதனச்சொந்தக்காரர்களின் தனித்தனியான பட்டியல் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு முதல் 05 வருடங்களுக்கு ஆதனவரி விலக்களிப்பு செய்யப்படும்.
- இவ் 05 வருட காலப்பகுதியில் சபையினால் மேற்கொள்ளப்படும் வறுமை ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களில் குறித்த ஆதனச் சொந்தக்காரர்கள் உள்வாங்கப்பட்டு பொருளாதார ரீதியில் அவர்களை வலுப்படுத்தி 05 ஆண்டின் பின் வழங்கப்பட்ட வரிவிலக்களிப்பு தொடர்தல் அல்லது இரத்து செய்தல் தொடர்பாக முற்சொன்ன செயல் நடைமுறைகள் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

02. வியாபார உரிமம், வியாபார வரி விலக்களிப்பு.

- மாற்றுவலுவுள்ளோர், பெண் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் வியாபார நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுக்கொண்டிருகின்ற போது வருடாந்த வரியிலிருந்து 50% விலக்களிப்பை மேற்கொள்ளல்.
- இவ் விலக்களிப்பை வழங்குவதற்கு ஏதுவாக வியாபார நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதனை காரணம் காட்டி விலக்களிப்பு கோர விரும்புபவர்கள் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் சபை உத்தியோகத்தர்களால் ஆராயப்பட்டு குறித்த விடயம் உறுதிப்படுத்தப்படும்.
- மேற்படி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றவர்களின் தனித்தனியான பட்டியல் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு மேற்படி விலக்களிப்பிற்கான அனுமதியினை கௌரவ ஆளுநரிடம் பெற்று செயற்படுத்த வேண்டும்.

**தீர்மான இல :- 02/21.10.2022**
2022.10.19 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை வகுத்தல் குழுக் கலந்துரையாடலில் சிபாரிசு செய்யப்பட்ட பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள குழுக்களிற்கு வரியிலிருந்து விலக்களிப்பதற்காக வகுக்கப்பட்ட பின்வரும் கொள்கைகளுக்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி

ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

01 ஆதனவரி விலக்களிப்பு.

1987 ஆம் ஆண்டின் 15ம் இல பிரதேசசபைச்சட்டத்தினூடாக பிரிவு 135 இன் உப பிரிவு (உ) இற்கமைவாக வலிகாமம் வடக்கு பிரதேச எல்லையில் வாழும் ஏழ்மை நிலைக்குட்பட்ட ஆதனச்சொந்தக்காரர்கள் ஆதனவரி அறவீட்டில் முழுத்தொகையையும் விலக்களிப்பது.

- இவ் விலக்களிப்பு வழங்குவதற்கு ஏதுவாக ஏழ்மைநிலையை காரணம் காட்டி விலக்களிப்பு கோர விரும்புபவர்கள் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் சபை உத்தியோகத்தர்களால் ஆராயப்பட்டு ஏழ்மைநிலையை உறுதிப்படுத்த பிரதேச செயலரின் சிபாரிசிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- பிரதேச செயலரின் சிபாரிசு வழங்கப்பட்ட ஆதனச்சொந்தக்காரர்களின் தனித்தனியான பட்டியல் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு முதல் 05 வருடங்களுக்கு ஆதனவரி விலக்களிப்பு செய்யப்படும்.
- இவ் 05 வருட காலப்பகுதியில் சபையினால் மேற்கொள்ளப்படும் வறுமை ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களில் குறித்த ஆதனச் சொந்தக்காரர்கள் உள்வாங்கப்பட்டு பொருளாதார ரீதியில் அவர்களை வலுப்படுத்தி 05 ஆண்டின் பின் வழங்கப்பட்ட வரிவிலக்களிப்பு தொடர்தல் அல்லது இரத்து செய்தல் தொடர்பாக முற்சொன்ன செயல் நடைமுறைகள் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

02 வியாபார உரிமம், வியாபார வரி விலக்களிப்பு.

- மாற்றுவலுவுள்ளோர், பெண் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் வியாபார நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுக்கொண்டிருகின்ற போது வருடாந்த வரியிலிருந்து 50% விலக்களிப்பை மேற்கொள்ளல்.
- இவ் விலக்களிப்பை வழங்குவதற்கு ஏதுவாக வியாபார நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதனை காரணம் காட்டி விலக்களிப்பு கோர விரும்புபவர்கள் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் சபை உத்தியோகத்தர்களால் ஆராயப்பட்டு குறித்த விடயம் உறுதிப்படுத்தப்படும்.
- மேற்படி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றவர்களின் தனித்தனியான பட்டியல் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு மேற்படி விலக்களிப்பிற்கான அனுமதியினை கௌரவ ஆளுநரிடம் பெற்று செயற்படுத்த வேண்டும்.

- கௌரவ உறுப்பினர்களான பாக்கியநாதர் மரியதாஸ், சிவபாலசுந்தரம் ஹரிகரன், சுபாஸ்கரன் சந்திரமதி ஆகியோர் காலை 09.55 மணிக்கு வருகை தந்தனர்.

➢ உப அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு (அவற்றின் கீழ் உள்ள நூல்நிலையம்) என்பவற்றிற்கு ரூபா 5,000.00 சிறு கட்டுநிதி வழங்கவும் ஒரே தடவையில் ரூபா 1,000.00 செலவு செய்ய அனுமதிக்கவும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 03/20.10.2022**

உப அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு (அவற்றின் கீழ் உள்ள நூல்நிலையம்) என்பவற்றிற்கு ரூபா 5,000.00 சிறு கட்டுநிதி வழங்கவும் ஒரே தடவையில் ரூபா 1,000.00 செலவு செய்ய அனுமதிக்கவும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ தீர்மான இலக்கம் 14/16.03.2022 இற்கமைவாக சபையின் திட்டமிடல் குழுவிற்கு நியமிக்கப்பட்ட திரு.இ.பகீரதன் (செயலாளர்) அவர்கள் இடமாற்றம் பெற்று சென்றமையால் அவருக்குப் பதிலாக திரு.சு.சுதர்ஜன் (செயலாளர்) அவர்களையும், திருமதி.த.சுதாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் பகுதி) அவர்கள் உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் அவருக்குப் பதிவாக செ.ரேணிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் பகுதி) அவர்களையும் நியமிப்பதற்கு சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 04/20.10.2022**

தீர்மான இலக்கம் 14/16.03.2022 இற்கமைவாக சபையின் திட்டமிடல் குழுவிற்கு நியமிக்கப்பட்ட திரு.இ.பகீரதன் (செயலாளர்) அவர்கள் இடமாற்றம் பெற்று சென்றமையால் அவருக்குப் பதிலாக திரு.சு.சுதர்ஜன் (செயலாளர்) அவர்களையும், திருமதி.த.சுதாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் பகுதி) அவர்கள் உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் அவருக்குப் பதிவாக செ.ரேணிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் பகுதி) அவர்களையும் நியமிப்பதற்கு தழுவு

அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பிரதம செயலாளர் தலைமையில் 2022.04.07 ஆம் திகதி நடைபெற்ற நான்காவது Provincial Steering Committee இன் அனுமதிக்கமைவாக LDSP திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக நியமிக்கப்பட்ட Key Staff மற்றும் குறித்த திட்ட வேலைகளில் ஈடுபடும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட மேற்பார்வைச் செலவு 1.5% இனை பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு செய்ய சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Supervision Cost | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.No | Name | Designation | Percentage in Amount | BT1 | BT2 | BT3 | PT1/02 | PT1/03 | PT - (II) | Total |
| 1 | Mr.R.Baherathan | Secretary | 25% | 22,956.29 | 34,087.50 | 34,526.89 | 7,500.00 | 7,500.00 | 21,838.18 | 128,408.85 |
| 2 | Mr.R.Sugarnan | Technical Officer | 20% | 18,365.03 | 27,270.00 | - | 6,000.00 | 6,000.00 | 17,470.54 | 75,105.57 |
| 3 | Mr.S.Tharshinthan | Technical Officer | 20% | - | - | 27,621.51 | - | - | - | 27,621.51 |
| 4 | Mrs.S.Sivayogam | CDO | 10% | 9,182.51 | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 51,363.54 |
| 5 | Ms.T.Pranavi | Subject staff - Procurement | 10% | - | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 42,181.03 |
| 6 | Ms.S.Jeevajini | Subject staff - Procurement | 10% | 9,182.51 | - | - | - | - | - | 9,182.51 |
| 7 | Mr.R.Thavaranjini | Subject staff - Finance | 10% | 9,182.51 | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 51,363.54 |
| 8 | Mr.P.Janakan | Technical Officer - ACLG | 15% | 13,773.77 | 20,452.50 | 20,716.13 | 4,500.00 | 4,500.00 | 13,102.91 | 77,045.31 |
| 9 | Mrs.J.Abarna | Subject staff - ACLG | 10% | 9,182.51 | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 51,363.54 |
| **Total** | | | | **91,825.14** | **136,350.00** | **138,107.55** | **30,000.00** | **30,000.00** | **87,352.71** | **513,635.40** |

**தீர்மான இல :- 05/20.10.2022**

பிரதம செயலாளர் தலைமையில் 2022.04.07 ஆம் திகதி நடைபெற்ற நான்காவது Provincial Steering Committee இன் அனுமதிக்கமைவாக LDSP திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக நியமிக்கப்பட்ட Key Staff மற்றும் குறித்த திட்ட வேலைகளில் ஈடுபடும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட மேற்பார்வைச் செலவு 1.5% இனை பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு செய்ய அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Supervision Cost | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.No | Name | Designation | Percentage in Amount | BT1 | BT2 | BT3 | PT1/02 | PT1/03 | PT - (II) | Total |
| 1 | Mr.R.Baherathan | Secretary | 25% | 22,956.29 | 34,087.50 | 34,526.89 | 7,500.00 | 7,500.00 | 21,838.18 | 128,408.85 |
| 2 | Mr.R.Sugarnan | Technical Officer | 20% | 18,365.03 | 27,270.00 | - | 6,000.00 | 6,000.00 | 17,470.54 | 75,105.57 |
| 3 | Mr.S.Tharshinthan | Technical Officer | 20% | - | - | 27,621.51 | - | - | - | 27,621.51 |
| 4 | Mrs.S.Sivayogam | CDO | 10% | 9,182.51 | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 51,363.54 |
| 5 | Ms.T.Pranavi | Subject staff - Procurement | 10% | - | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 42,181.03 |
| 6 | Ms.S.Jeevajini | Subject staff - Procurement | 10% | 9,182.51 | - | - | - | - | - | 9,182.51 |
| 7 | Mr.R.Thavaranjini | Subject staff - Finance | 10% | 9,182.51 | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 51,363.54 |
| 8 | Mr.P.Janakan | Technical Officer - ACLG | 15% | 13,773.77 | 20,452.50 | 20,716.13 | 4,500.00 | 4,500.00 | 13,102.91 | 77,045.31 |
| 9 | Mrs.J.Abarna | Subject staff - ACLG | 10% | 9,182.51 | 13,635.00 | 13,810.76 | 3,000.00 | 3,000.00 | 8,735.27 | 51,363.54 |
| **Total** | | | | **91,825.14** | **136,350.00** | **138,107.55** | **30,000.00** | **30,000.00** | **87,352.71** | **513,635.40** |

- எமது சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன பின்வரும் விபரப்படி குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2023 விளம்பரத்தினை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | குத்தகைவிபரம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச்சந்தை | 56,100.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 55,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல – 07 | 24,350.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 11,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | 121,200.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 809,710.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 110,550.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 585,600.00 |
| 09 | இறால்மடம் சந்தை | 25,000.00 |
| 10 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 27,500.00 |
| 11 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 571,648.00 |
| 12 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 692,120.00 |
| 13 | கும்பலைச்சந்தை | 331,150.00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | |
| 01 | கூத்தன்சீமாச்சந்தை | 55,000.00 |
| 02 | கூத்தன்சீமாச்சந்தை கோழிக்கடை | 77,000.00 |
| 03 | கூத்தன்சீமாச்சந்தை கருவாட்டுக்கடை | 16,500.00 |
| 04 | கணேஸ்வரம் சந்தை | 44,500.00 |
| 05 | கணேஸ்வரம் சந்தை கோழிக் கடை | 55,100.00 |
| 06 | கீரிமலை மரக்கறிச்சந்தை | 26,796.00 |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | 441,265.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 698,611.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 539,880.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 20,000.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 14,537.00 |
| 06 | குரும்பசிட்டி சந்தை | 11,200.00 |
| 07 | குரும்பசிட்டி கோழிக்கடை | 40,200.00 |
| 08 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 173,800.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | 75,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 77,660.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 67,000.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 60,000.00 |
| 05 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 53,300.00 |

**தீர்மான இல :- 06/20.10.2022**

எமது சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன பின்வரும் விபரப்படி குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2023 விளம்பரத்தினை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | குத்தகைவிபரம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச்சந்தை | 56,100.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 55,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல – 07 | 24,350.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 11,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | 121,200.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 809,710.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 110,550.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 585,600.00 |
| 09 | இறால்மடம் சந்தை | 25,000.00 |
| 10 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 27,500.00 |
| 11 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 571,648.00 |

| | | |
|---|---|---|
| 12 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 692,120.00 |
| 13 | கும்பலைச்சந்தை | 331,150.00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | |
| 01 | கூத்தன்சீமாச்சந்தை | 55,000.00 |
| 02 | கூத்தன்சீமாச்சந்தை கோழிக்கடை | 77,000.00 |
| 03 | கூத்தன்சீமாச்சந்தை கருவாட்டுக்கடை | 16,500.00 |
| 04 | கணேஸ்வரம் சந்தை | 44,500.00 |
| 05 | கணேஸ்வரம் சந்தை கோழிக் கடை | 55,100.00 |
| 06 | கீரிமலை மரக்கறிச்சந்தை | 26,796.00 |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | 441,265.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 698,611.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 539,880.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 20,000.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 14,537.00 |
| 06 | குரும்பசிட்டி சந்தை | 11,200.00 |
| 07 | குரும்பசிட்டி கோழிக்கடை | 40,200.00 |
| 08 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 173,800.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | 75,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 77,660.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 67,000.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 60,000.00 |
| 05 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 53,300.00 |

- மலக்கழிவு அகற்றும் பணியாளர்களுக்கு விசேட ஊக்குவிப்பு தொகை வழங்குவதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் மலக்கழிவு அகற்றும் செயற்பாட்டிற்கு பல உத்தியோகத்தர்கள் முன் வருவதில்லை எனத் தெரிவித்தார்.
  - கௌரவ உறுப்பினர்களான இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா, செல்வகுமாரன் விஜயராஜ் ஆகியோர்கள் ரூபா 300 இனை ஊக்குவிப்பு தொகையாக வழங்கலாம் எனத் தெரிவித்தனர்.
  - கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் ரூபா 100 அல்லது 200 இனை ஊக்குவிப்பு தொகையாக வழங்கலாம் எனத் தெரிவித்தார்.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது எரிபொருள் பிரச்சினை காரணமாக ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் இச்சேவை தடைப்பட்டுள்ளது. எனவே இதற்கான கேள்வி அதிகமாக உள்ளது எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 07/20.10.2022**

மலக்கழிவு அகற்றும் பணியாளர்களுக்கு விசேட ஊக்குவிப்பு தொகையாக ஒரு தடவைக்கு (6000l) ரூபா 200.00 இனை வழங்குவதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வாழ்விடங்களை மேம்படுத்தல் மலசலகூடம் அமைத்தல் (மாற்றுத்திறனாளி உட்பட) செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட கீழ்வரும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 250,000.00 செலவினத்தில் மலசலகூடம் அமைத்து வழங்குவதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | கிராம அலுவலர் பிரிவு | வட்டார இல | முகவரி | குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.கந்தன் கஜன் | J/212 | 21 | நரியிட்டான் | 04 |
| 2 | திரு.கந்தசாமி சந்திரன் | J/217 | 18 | கும்பலை, அளவெட்டி | 05 |
| 3 | திரு.தேவராசா பகீதரராசா | J/225 | 10 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 05 |
| 4 | திரு.பாலசிங்கம் சுரேந்திரன் | J/232 | 09 | பட்டிக்கடவை, மாவிட்டபுரம் தெற்கு | 07 |
| 5 | திரு.கந்தையா பரஞ்சோதி | J/221 | 02 | மயிலங்கூடல் வைரவர் கோவில், இளவாலை | 04 |

- கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் இவ்வேலைத்திட்டங்களை சனசமூக நிலையத்தினால் மேற்கொள்ள முடியாதா? எம்மால் வழங்கப்படும் நிதியை பயனாளிகள் வேறு தேவைக்கு பயன்படுத்தக் கூடும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் பயனாளிகளுக்கான பணத்தினை பகுதியளவில் பௌதீக முன்னேற்றத்தை பரிசோதித்தே வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 08/20.10.2022**
வாழ்விடங்களை மேம்படுத்தல் மலசலகூடம் அமைத்தல் (மாற்றுத்திறனாளி உட்பட) செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட கீழ்வரும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 250,000.00 செலவினத்தில் மலசலகூடம் அமைத்து வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | பெயர் | கிராம அலுவலர் பிரிவு | வட்டார இல | முகவரி | குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.கந்தன் கஜன் | J/212 | 21 | நரியிட்டான் | 04 |
| 2 | திரு.கந்தசாமி சந்திரன் | J/217 | 18 | கும்பலை, அளவெட்டி | 05 |
| 3 | திரு.தேவராசா பகீதரராசா | J/225 | 10 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 05 |
| 4 | திரு.பாலசிங்கம் சுரேந்திரன் | J/232 | 09 | பட்டிக்கடவை, மாவிட்டபுரம் தெற்கு | 07 |
| 5 | திரு.கந்தையா பரஞ்சோதி | J/221 | 02 | மயிலங்கூடல் வைரவர் கோவில், இளவாலை | 04 |

- மாவிட்டபுரம் பகுதியில் உள்ள உப வீதிக்கு ‘எழுச்சி மாதா அமரர் இ.மு.நா தங்கம்மா வீதி’ என பெயர் மாற்றம் செய்வதற்கு மாவை பாரதி சனசமூக நிலையத்தினரால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீதிக்கு ‘எழுச்சி மாதா அமரர் இ.மு.நா தங்கம்மா வீதி’ என பெயர் மாற்றம் செய்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 09/21.10.2022**
மாவிட்டபுரம் பகுதியில் உள்ள உப வீதிக்கு ‘எழுச்சி மாதா அமரர் இ.மு.நா தங்கம்மா வீதி’ என பெயர் மாற்றம் செய்வதற்கு மாவை பாரதி சனசமூக நிலையத்தினரால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீதிக்கு ‘எழுச்சி மாதா அமரர் இ.மு.நா தங்கம்மா வீதி’ என பெயர் மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள எரியூட்டியினை பொருத்தமான இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடிதம் மூலம் கோரியுள்ளார். அதன் பிரகாரம் இவ் எரியூட்டியினை சீராவளை சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தில் தொழிற்பட செய்வதனால் கொல்களக்கழிவுகள், பொலித்தீன் கழிவுகளை பாதுகாப்பாக எரியூட்ட வசதி ஏற்படும். இது தொடர்பாக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
    - கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அமைந்துள்ள எரியூட்டி உயரம், தராதரம் போன்றவை குறைவாக இருப்பதனாலும் எரியூட்டப்படும் முறையினாலும் பாதிப்பு ஏற்படுகிறது. இது தொடர்பாக பல இடங்களில் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. யாழ் போதனா வைத்தியசாலையின் எரியூட்டி பழுதடைந்துள்ளமையால் அங்குள்ள கழிவுகளும் இங்கேயே எரியூட்டப்படுவதாக அறிய முடிகின்றது. இவ்வாறான நிலையில் எரியூட்டியினை சீராவளையில் தொழில்பட செய்வது வித்தகபுரம், பன்னாலை மக்களுக்கு ஆபத்தாகும் எனத் தெரிவித்தார். எனவே இவ்எரியூட்டி வேறு பொருத்தமான இடத்திற்கே மாற்றப்பட வேண்டும். இது தொடர்பாக சுற்றுச்சூழல் அதிகார சபையினர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் ஆகியோரிடம் கலந்துரையாட வேண்டும் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் மக்கள் அதிகமாக குடியிருக்கும் பகுதிகளில் எரியூட்டி அமையும் போது பாதிப்பு ஏற்படும். எரியூட்டியை சீராவளையில் அமைப்பதற்கு சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதி பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ தவிசாளர் அவர்கள் சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதி பெறப்படும். குறித்த இடத்திலிருந்து 500m தூரத்தில் மக்கள் யாரும் குடியிருக்கவில்லை எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் எரியூட்டியிலிருந்து வெளியேறும் புகை காற்றில் பரவி சுவாச நோய்களை ஏற்படுத்தும். பரவலடையும் தூரத்தை வரையறுக்க முடியாது. எனவே இது தொடர்பாக ஆராய்ந்து செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் பிரதேசத்தில் வசிப்பவர்கள் என்ற வகையில் நாமும் கலந்து கொள்வது பொருத்தமாகும் எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் சபையின் கௌரவ உறுப்பினர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுற்றுச்சூழல் அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்படும் எனத் தெரிவித்தார்.
- மேற்படி கலந்துரையாடல் ஒழுங்கமைத்து ஆலோசனைகளை பெற்ற பின் இது தொடர்பாக சபையின் அடுத்த மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளலாம் என சபையினரால் தெரிவிக்கப்பட்டது.

➢ காங்கேசன்துறை பொது நூலகத்தில் நூலகர் மற்றும் தொழிலாளி ஓய்வு பெற்றுள்ளமையாலும் அளவெட்டி பொது நூலகத்தின் தொழிலாளி ஓய்வு பெறவுள்ளமையாலும் நூலக சேவையை சீராக வழங்க வெளிவாரி அடிப்படையில் மூன்று தொழிலாளிகளை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசிற்கமைய சனசமூக நிலையம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொள்ள சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 10/20.10.2022**
காங்கேசன்துறை பொது நூலகத்தில் நூலகர் மற்றும் தொழிலாளி ஓய்வு பெற்றுள்ளமையாலும் அளவெட்டி பொது நூலகத்தின் தொழிலாளி ஓய்வு பெறவுள்ளமையாலும் நூலக சேவையை சீராக வழங்க வெளிவாரி அடிப்படையில் மூன்று தொழிலாளிகளை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசிற்கமைய சனசமூக நிலையம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ எமது சபையின் வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடையை குத்தகைக்கு பெற்றவர் தனது கட்டுப்பணத்தை செலுத்தாத காரணத்தினால் சபை பொறுப்பேற்று 01.10.2022-31.12.2022 வரை உள்ளூர் கேள்வி அறிவித்தல் மூலம் மீளவழங்குவதற்கு 23.09.2022 பின்வரும் விபரப்படி விளம்பரப்படுத்தபட்டது. இதற்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| குத்தகை விபரம் | மாதவாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|
| வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 3,300.00 |

**தீர்மான இல :- 11/20.10.2022**
எமது சபையின் வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடையை குத்தகைக்கு பெற்றவர் தனது கட்டுப்பணத்தை செலுத்தாத காரணத்தினால் சபை பொறுப்பேற்று 01.10.2022-31.12.2022 வரை உள்ளூர் கேள்வி அறிவித்தல் மூலம் மீளவழங்குவதற்கு 23.09.2022 பின்வரும் விபரப்படி விளம்பரப்படுத்தபட்டது. இதற்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| குத்தகை விபரம் | மாதவாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|
| வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 3,300.00 |

➢ 23.09.2022 திகதிய உள்ளூர் கேள்வி அறிவித்தல் விளம்பரத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் 30.09.2022 திறந்து பரிசீலிக்கப்பட்டது. திரு.நவரட்ணம் சுதன் என்பவர் மட்டும் கேள்வி கோரியிருந்தார் வேறு எவரும் கேள்வி கோராததால் திரு.நவரட்ணம் சுதன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 3,400.00 ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்கே வழங்குவதற்கு கேள்வி சபையால் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 12/20.10.2022**
23.09.2022 திகதிய உள்ளூர் கேள்வி அறிவித்தல் விளம்பரத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் 30.09.2022 திறந்து பரிசீலிக்கப்பட்டது. திரு.நவரட்ணம் சுதன் என்பவர் மட்டும் கேள்வி கோரியிருந்தார் வேறு எவரும் கேள்வி கோராததால் திரு.நவரட்ணம் சுதன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 3,400.00 ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்கே வழங்குவதற்கு கேள்வி சபையால் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான சபையின் தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ எமது சபையின் இறால்மடம் கோழிக்கடையை குத்தகைக்கு பெற்றவர் தனது கட்டுப்பணத்தை செலுத்தாத காரணத்தினால் சபை பொறுப்பேற்று 01.11.2022-31.12.2022 வரை ஏலம் கூறல் மூலம் மீளவழங்குவதற்கு பின்வரும் விபரப்படி விளம்பரப்படுத்த சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| குத்தகைவிபரம் | மாதவாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|
| இறால்மடம் கோழிக்கடை | 1,250.00 | 4,200.00 |

**தீர்மான இல :- 13/20.10.2022**

எமது சபையின் இறால்மடம் கோழிக்கடையை குத்தகைக்கு பெற்றவர் தனது கட்டுப்பணத்தை செலுத்தாத காரணத்தினால் சபை பொறுப்பேற்று 01.11.2022-31.12.2022 வரை ஏலம் கூறல் மூலம் மீளவழங்குவதற்கு பின்வரும் விபரப்படி விளம்பரப்படுத்த அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| குத்தகைவிபரம் | மாதவாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|
| இறால்மடம் கோழிக்கடை | 1,250.00 | 4,200.00 |

- நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்ட மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6,7 ஐ தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தினால் சபையிடம் மீள ஒப்படைப்பதாக கடிதம் மூலம் அறியத்தந்துள்ளனர். இதற்கமைய பின்வரும் விபரப்படி இக்கடைகளை மீள கேள்வி கோருவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| விபரம் | அளவு | மாதவாடகை | ஆகக்குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | 162.5 sq.ft | 2,500.00 | 600,000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | 162.5 sq.ft | 2,500.00 | 600,000.00 |

**தீர்மான இல :- 14/20.10.2022**

நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்ட மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6,7 ஐ தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தினால் சபையிடம் மீள ஒப்படைப்பதாக கடிதம் மூலம் அறியத்தந்துள்ளனர். இதற்கமைய பின்வரும் விபரப்படி இக்கடைகளை மீள கேள்வி கோருவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| விபரம் | அளவு | மாதவாடகை | ஆகக்குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | 162.5 sq.ft | 2,500.00 | 600,000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | 162.5 sq.ft | 2,500.00 | 600,000.00 |

- சபையில் கடமையாற்றும் காவலாளிகள் விடுமுறை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் பதிற்கடமைக்காக வெளிவாரி அடிப்படையில் பொருத்தமான நபர்களை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சிற்கமைய சனசமூக நிலையம் ஒன்றின் மூலம் தேவை நிமித்தம் பெற்றுக் கொள்ள சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 15/20.10.2022**

சபையில் கடமையாற்றும் காவலாளிகள் விடுமுறை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் பதிற்கடமைக்காக வெளிவாரி அடிப்படையில் பொருத்தமான நபர்களை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சிற்கமைய சனசமூக நிலையம் ஒன்றின் மூலம் தேவை நிமித்தம் பெற்றுக் கொள்ள கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- மாவட்ட செயலகத்தின் விலை நிர்ணய அடிப்படையில் மலக்கழிவு அகற்றல் சேவைக்கு 6000l (ஒரு தடவை) ரூபா 9,300.00 அறவிடவும் மலக்கழிவு சேவை சாத்தியத்தை பரிசீலிக்க ரூபா 500.00 அறவிடவும் சேவையை பெற்றுக் கொள்பவர்களிடமிருந்து பரிசீலனைக்கட்டணத்தை கழித்து மிகுதியை அறவிட (9,300.00-500.00=8,800.00) சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 16/20.10.2022**

மாவட்ட செயலகத்தின் விலை நிர்ணய அடிப்படையில் மலக்கழிவு அகற்றல் சேவைக்கு 6000l (ஒரு தடவை) ரூபா 9,300.00 அறவிடவும் மலக்கழிவு சேவை சாத்தியத்தை பரிசீலிக்க ரூபா 500.00 அறவிடவும் சேவையை பெற்றுக் கொள்பவர்களிடமிருந்து பரிசீலனைக்கட்டணத்தை கழித்து மிகுதியை அறவிட (9,300.00-500.00=8,800.00) அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எமது சபையின் நடைமுறைக்கணக்கிலக்கம் 7573141 உள்ள நிதியிலிருந்து 2022 ஆம் ஆண்டிற்கான சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 20.00 மில்லியன் நிதியினை ரூபா 10Mn, ரூபா 10Mn தொகைகளாக 1 மாத கால நிலையான வைப்பில் இடுவதற்கும் குறித்த வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றதும் நிலையான வைப்பினை மீளப் பெற்று கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 17/20.10.2022**

எமது சபையின் நடைமுறைக்கணக்கிலக்கம் 7573141 உள்ள நிதியிலிருந்து 2022 ஆம் ஆண்டிற்கான சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட

நிதியில் ரூபா 20.00 மில்லியன் நிதியினை ரூபா 10Mn, ரூபா 10Mn தொகைகளாக 1 மாத கால நிலையான வைப்பில் இடுவதற்கும் குறித்த வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றதும் நிலையான வைப்பினை மீளப் பெற்று கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான செப்டெம்பர் மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ அடுத்து 15.09.2022 ஆம் திகதி நடைபெற்ற சுற்றாடலும் பொது வசதிகளும் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

❖ திண்மகழிவகற்றல் வாகனத்திற்கு ஒலி எழுப்புவதற்கான உபகரணம் பொருத்தப்பட வேண்டும்.
❖ சுகாதாரம் தொடர்பான விடயங்களை ஆராய பொதுச்சுகாதார பரிசோதகர்களுடன் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்த வேண்டும்.
❖ காங்கேசன்துறை கடற்கரை பிரதேசம், காங்கேசன்துறை கீரிமலை பிரதான வீதி, கடற்தொழிலாளர்கள் செல்லும் வீதி என்பவற்றில் மின்விளக்குகள் பொருத்தப்பட வேண்டும்.
❖ தெருவோரங்களில் கடைகள் வைத்திருப்பவர்களால் வீதியோரங்களில் குப்பைகள் போடப்படுவது தடுக்கப்பட வேண்டும்.
❖ ஆவளை (தையிட்டி) மயானம் துப்பரவு செய்யப்பட வேண்டும்.

➢ அடுத்து 15.09.2022 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

❖ விதை தானியங்கள் வழங்கப்பட்ட பயனாளிகள் அவற்றை பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
❖ பாடசாலைகளுக்கு விதைகளை வழங்கும் போது மாணவர்கள் காலை உணவாக பயன்படுத்தக் கூடிய பயிர்களின் விதைகளை வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

➢ அடுத்து 18.10.2022 ஆம் திகதி நடைபெற்ற பெண்கள் சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

❖ மாணவர்களின் போதைப்பொருள் பாவனை தொடர்பாக பெற்றோரிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
❖ வறுமைக்கோட்டிற்குட்பட்ட மகளிர், போசாக்கு குறைவான சிறுவர்களின் விபரங்களை பெற்று வாழ்வாதார உதவிகளை வழங்க வேண்டும்.

➢ அடுத்து 18.10.2022 ஆம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப சேவைகள் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

❖ கும்பலை பொதுமண்டப வளாகத்தினை புனரமைத்து சுற்றுமதில் அமைக்கப்பட வேண்டும்.
❖ கலை ஒளி வீதி Shoulter இடப்படாமையால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதால் சீர் செய்யப்பட வேண்டும்.
❖ கட்டுப்பிட்டி மயானம் துப்பரவாக்கப்பட வேண்டும். களஞ்சிய அறையின் வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். பாராமரிப்புக்குழு அமைக்கப்பட வேண்டும்.
❖ மக்கள் வீடுகளின் மதில்ஓரங்களை போக்குவரத்திற்கு இடையூறு இன்றி பேண வேண்டும்.

➢ அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.
❖ கௌரவ தவிசாளர் அவர்கள் மக்களுடைய காணிகளில் அவர்கள் மீளக் குடியமரமுடியாத சூழ்நிலையில் அவர்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றபோது அவர்களின் காணிகள் இராணுவத்தின் தேவைக்காக நில அபகரிப்பு செய்வதற்காக நிலஅளவை செய்வதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் பாராளுமன்ற உறுப்பினர்களின் சில வீடுகள் அழிக்கப்பட்ட போது அவர்கள் கண்ணீர் சிந்தி அழுகின்றனர். அவர்களுக்கு வீடுகள் மட்டுமே அழிவடைந்தது. ஆனால் எமது மக்கள் வீடுகள் மட்டுமின்றி காணிகளே இல்லாத நிலையில்

கடந்த 32 வருடங்களாக அழுகின்றனர். 1983 ஆம் ஆண்டிற்கு முன் பலாலி சர்வதேச விமான நிலையமாக செயற்பட்டதுடன் பலாலி – சென்னை விமான போக்குவரத்து நடைபெற்று வந்த நிலையில் அருகில் மக்கள் வசித்து வந்ததுடன் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தனர். அப்போது மக்கள் வசித்த போதும் இராணுவத்தினர் சுதந்திரமாக செயற்பட்டு வந்தனர். ஆனால் தற்போது விமான நிலையத்திற்காக பாதுகாப்பு காரணத்தினை கூறி முன்னரை விட அதிகளவான மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் உயர்பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்ட போது போராட்டங்கள் நடைபெற்று உடனடியாக வாபஸ் பெறப்பட்டது. ஆனால் எமது மக்கள் எவ்வித போராட்டங்களையும் முன்னெடுக்காத போது அவர்களின் காணிகள் உயர்பாதுகாப்பு வலயமாக குறிப்பிடப்படுவது தவறாகும். தற்போதைய பொருளாதார நெருக்கடியால் சொந்த இடங்களில் வாழும் மக்களே சிரமப்படும் போது எமது மக்கள் கடந்த 32 வருடங்களாக சொந்த காணிகள், வீடுகள், தொழில் இன்றி அல்லல்படுகின்றனர். எனவே முன்னர் இருந்தவாறு விமான நிலையத்திற்கான காணியை தவிர மக்கள் வாழ்ந்த காணிகள், விவசாய நிலையங்களை விடுவிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் பலாலி விமான நிலைய தளம் அமைந்துள்ள பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என கூறப்படுகின்றது. அருகில் மக்கள் வசிக்க முடியாது எனில் நீர்கொழும்பு விமான நிலையத்திற்கு அருகில் மக்கள் வசித்து வருகின்றனர் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் உயர்பாதுகாப்பு வலயத்தினை நீக்க கோரி கொழும்பில் மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டபோது உடனடியாக நீக்கப்பட்டது. ஆனால் எமது மக்கள் கடந்த 32 வருடங்களாக மீளக்குடியமரமுடியாமல் சிரமப்படுகின்றனர். அரசாங்கம் தென்னிலங்கையையும் வடக்கு மக்களையும் வேறாக கருதுகின்றது. எமது மக்களின் குரலுக்கும் மதிப்பளித்து உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 18/20.10.2022**

வலிகாமம் வடக்கில் மக்கள் கடந்த 32 வருடங்களாக தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாமல் நலன்புரி நிலையங்கள், வேறு இடங்களில் இருந்து தொழில் வாய்ப்புகள் இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். 1983 ஆம் ஆண்டிற்கு முன் பலாலி சர்வதேச விமான நிலையமாக செயற்பட்டதுடன் பலாலி – சென்னை விமான போக்குவரத்து நடைபெற்று வந்த நிலையில் அருகில் மக்கள் வசித்து வந்ததுடன் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தனர். தற்போது விமான நிலையத்திற்காக முன்னரை விட அதிகளவான மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளது. மக்களுடைய காணிகளை இராணுவத்திற்கு கையளிப்பதை எமது சபை வன்மையாக கண்டிப்பதுடன் மக்களுடைய காணிகள் விடுவிக்கப்பட்டு தங்கள் சொந்த இடங்களில் அவர்கள் மீள்குடியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இத் தீர்மானத்தை ஜனாதிபதி, யாழ்மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித்தலைவர்கள், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோருக்கு கடிதம் மூலம் அனுப்ப வேண்டும் எனவும் சபையால் தீர்மானிக்கப்பட்டது.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பிரதேசத்தில் J/248, J/255, J/256 ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் முழுமையாக விடுவிக்கப்படாமல் உள்ளதுடன் 18 கிராம சேவையாளர் பிரிவுகள் பகுதியளவிலேயே விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மக்கள் குறைவாக இருக்கின்ற கிராம சேவையாளர் பிரிவுகளை ஒன்றிணைத்து கிராம சேவையாளர் பிரிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகின்றது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் 1990 ஆண்டு குடியிருந்த மக்களை வெளியேற்றியே இராணுவம் இருந்தது. தற்போது கிராம சேவையாளர் பிரிவுகளை குறைப்பது தவறான செயற்பாடு ஆகும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 19/20.10.2022**

எமது பிரதேசத்தில் 45 கிராம சேவையாளர் பிரிவுகளில் J/248, J/255, J/256 ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் முழுமையாக விடுவிக்கப்படாமல் உள்ளதுடன் 18 கிராம சேவையாளர் பிரிவுகள் பகுதியளவிலேயே விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் தொகை குறைவாக காணப்படுவதால் அவற்றை ஒன்றிணைத்து கிராம சேவையாளர் பிரிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகின்றது. யாழ் மாவட்ட செயலகத்தின் புள்ளி விபர அறிக்கையில் விடுவிக்கப்படாத கிராம சேவையாளர் பிரிவுகளில் வதியும் மக்கள் எண்ணிக்கை பூச்சியம் எனக் காட்டப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வாக்காளர் இடாப்பில் கிராம சேவையாளர் பிரிவுகளில் வதியும்

மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் கிராம சேவையாளர் பிரிவுகளை நீக்குகின்ற நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இத் தீர்மானத்தை ஜனாதிபதி, யாழ்மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித்தலைவர்கள், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோருக்கு கடிதம் மூலம் அனுப்ப வேண்டும் எனவும் சபையால் தீர்மானிக்கப்பட்டது.

❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் கௌரவ தவிசாளர், உபதவிசாளர், உறுப்பினர்களுக்கு வணக்கம் தெரிவித்ததுடன் சபையின் அளவெட்டி பொதுநூலகம் ஆரம்பமாகும் நேரம், முடிவடையும் நேரம் தொடர்பாக வினாவியதுடன் இந்நூலகத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பாக வட்டார உறுப்பினர் என்ற வகையில் எனக்கு அறிவித்தல் வழங்கப்படுவதில்லை. நான் அரசாங்க சேவையில் கடமையாற்றி வருவதால் நிகழ்வுகள் தொடர்பாக முன்னரே அறிவித்தல் வழங்கினால் சிறப்பாக இருக்கும். சந்தைகள் கேள்வி கோரப்படாமைக்கு அவற்றின் புறச்சூழல் பாதிப்பால் அவற்றின் செயற்பாடுகள் மழுங்கடிக்கப்படுவது காரணமாகும். மலைவேம்படி சந்தை செயற்பாடு தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றது. இங்கு செயற்படும் வாகன திருத்தகம் சுத்திகரிப்பு நிலையமாகவும் வாகனங்களுக்கு வர்ணம் பூசும் நிலையமாகவும் விரிவடைந்துள்ளது. எமது சபையின் திண்மக்கழிவகற்றல் செயற்பாடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதற்கான உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அதே சமயம் நேற்றைய தினம் மல்லாகம் பகுதியில் கழிவகற்றும் வாகனம் ஒரு இடத்தில் தரித்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. வேறு சில இடங்களிலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இது தொடர்பான காண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அளவெட்டி அருணோதயாக்கல்லூரி அமைந்துள்ள வீதியின் இருமருங்கிலும் பாடசாலை முடிவடைகின்ற நேரத்தில் வெளிநபர்கள் நின்று மாணவர்களை இடைமறித்து கதைப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தற்போது மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவதானிப்பது இல்லை. அவர்கள் போக்குவரத்து ஒழுங்குகளை மட்டுமன்றி பாடசாலை சுற்றாடலில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக அவதானித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும். எமது மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாக நாம் பொறுப்புடையவர்களாக செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பொது நூலகங்கள் காலை 8.00 முதல் மாலை 6.00 வரை செயற்படும். மலைவேம்படி சந்தையில் அமைந்துள்ள திருத்தகம் தொடர்பாக எமது உத்தியோகத்தர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நேற்றைய தினம் மல்லாகம் பகுதி கழிவகற்றல் வாகனம் விடய உத்தியோகத்தர் கடமை நிமித்தம் வெளியே சென்றமையால் எரிபொருள் நிரப்புவதற்காகவே குறித்த இடத்தில் தரித்து நின்றது எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தை சூழ வெள்ளம் தேங்கி இருக்கின்றது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் கீரிமலை மயான எரிகொட்டகை பழுதடைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் கடற்காற்று காரணமாகவே எரிகொட்டகை பழுதடைகின்றது. பொருத்தமான கட்டமைப்பு தொடர்பாக ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ் அவர்கள் மழைகாலம் வருவதால் அலுக்கை சந்தி வெள்ள வாய்க்கால் துப்பரவு செய்யப்பட வேண்டும். கும்பலை பொது மண்டபத்திற்கு சுற்று மதில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் விவசாய உபகரணங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நிகழ்விற்கு உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை. LDSP திட்டத்தின் அடுத்த கட்ட நிதி மூலம் பொருளாதார கட்டியெழுப்புவது தொடர்பாக சபையில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு கௌரவ உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக செயலாளர் அவர்கள் கூறுவார் எனத் தெரிவித்தார்.

❖ செயலாளர் அவர்கள் கௌரவ தவிசாளர், உபதவிசாளர், உறுப்பினர்களுக்கு வணக்கம் தெரிவித்ததுடன் LDSP திட்டத்தின் PT யின் அடுத்த கட்ட நிதி விடுவிப்பு தொடர்பாக நாட்டின் பொருளாதார நிலையை அடிப்படையாக கொண்டு உணவு பாதுகாப்பு, பொருளாதார மேம்படுத்தல், பிரதேச சபைகளின் சேவைகள் தொடர்பாக ஏனைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்களுடன் தெரிவு செய்யப்பட்ட 5 கௌரவ உறுப்பினர்கள், தெரிவு செய்யப்பட்ட

5 சனசமூக நிலைய அங்கத்தவர்களுடன் கலந்துரையாடலை நடாத்தி முன்னுரிமை அடிப்படையில் வேலைத்திட்டங்களை தயாரிப்பதற்கான பயிற்சிநெறியாக நடாத்தப்பட்டது. அதில் 9 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு திட்டங்களை பரிசீலித்து சாதகமான வேலைத்திட்டங்களின் பட்டியலை வழங்கும். அப்பட்டியலை சபைக்கு சமர்ப்பித்து சபை அனுமதி பெற்று குறித்த வேலைத்திட்டங்களுக்காக வழங்கப்படும் நிதியில் அவற்றை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் கௌரவ உறுப்பினர்கள் சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இத்துடன் கூட்டமானது காலை 11.35 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: சு.சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

ஒப்பம்: சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை.